# அறந்தாங்கி நகராட்சி

## நகர்மன்ற கூட்ட நிகழ்ச்சி நிரல்

## ஸ்ரீ சார்வரி வருடம் கார்த்திகை மாதம் 29– ஆம் நாள் டிசம்பர் மாதம் 14.12.2020ம் நாள் திங்கள் கிழமை காலை 11.30 மணிக்கு நடைபெற உள்ள அவசர கூட்டப் பொருள் விபரம்

**பொருள் எண்.1**

அறந்தாங்கி நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் சிறப்பு சாலைகள் திட்டம் 2020–21–ன் கீழ் ரூ.6.00 கோடி மதிப்பீட்டில் சாலை பணிகளை மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கும் பொருட்டு மன்ற தீர்மானம் நிறைவேற்றி அனுப்பி வைக்குமாறு நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் கடித ந.க.எண்.20557/2020/இ3 நாள்.11.12.2020ஆம் தேதியிட்ட கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதில் கீழ்கண்டவாறு நிதி ஒதுக்கீடு செய்து வரப்பெற்றுள்ளது.

| நகராட்சியின் பெயர் | மதிப்பீட்டு தொகை (ரூ.கோடியில்) | சிறப்பு சாலைகள் திட்ட நிதி மான்யம் (ரூ.கோடியில்) | நகராட்சி பங்களிப்பு (ரூ.கோடியில்) |
|---|---|---|---|
| அறந்தாங்கி | ரூ. 6.00 | ரூ. 5.10 | ரூ.0.90 |

மேற்படி வரப்பெற்ற கடிதம் மன்றத்தின் பார்வைக்கும், கீழ்காணும் பணிகளை மேற்படி நிதி ஒதுக்கீட்டின் அடிப்படையில் மேற்கொள்ளவும், இந்த பணிகளுக்கு நிர்வாக அனுமதி பெற நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு கருத்துரு அனுப்பி வைக்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**பணிகள் விபரம்**

| வ. எண் | வேலையின் பெயர் | சாலையின் நீளம் (கி.மீ) | சாலையின் அகலம் (மீ) | மதிப்பீடு (ரூ.லட்சத்தில்) |
|---|---|---|---|---|
| | **சிப்பம் – 1 (தார் சாலை)** | | | |
| 1 | ராஜன் நகர், வி.எஸ்.ஆர். நகர் பிரதான குறுக்கு சாலை, கணபதி நகர், கோட்டை–1 காரைக்குடி ரோடு வசந்தம் மஹால் அருகில், வெள்ளாறு நீரேற்று நிலைய சாலை, எழில் நகர் 15வது தெரு, அண்ணா நகர், அக்னி பஜார் கம்மங்காடு சாலை, கள்ளி சந்து –2 பழைய மின்வாரிய | 4.568 | 4.20 முதல் 5.50 வரை | 200.00 |

**தீர்மான எண்:–** 95

**தீர்மானம்:–** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | சாலை, மணிவிளான் 5வது குறுக்கு ரோடு அவுலியாவிற்கு எதிர் புறம், தாரணி நகர், எழில் நகர் 4வது தெரு, அண்ணா மலை நகர், அருகன் குளம் ரோடு, வீரமாகாளி கோவில் ரோடு ஆகிய சாலைகளை தார் சாலைகளாக புதுப்பித்தல் | | | | | |
| | | | | **4.568** | | **200.00** | | |
| | | | **சிப்பம் – 2 (தார் சாலை)** | | | | | |
| | | 1 | பட்டுகோட்டை ரோடு அலெக்ஸ் பாத்திரகடை குறுக்கு ரோடு, புது நகர் சாலை, நவித் காலணி சாலை, எல்.என்.புரம் சன்னதிவயல் சாலை பிள்ளையார் கோவில் அருகில், ராஜாஜி நகர், எல்.என்.புரம் தென்றல் நகர் இ.பி. காலணி, எல்.என்.புரம் –3 ராம காந்தி கல்யாண மண்டபம் முதல் சுடுகாடு வரை, தாரணி நகர், வளையல்காரத் தெரு, எல்.என்.புரம் நீதிமன்றம் அருகில், சட்டமன்ற உறுப்பினர் அலுவலக சாலை, ரெங்கோஜிபாவா தெரு (அக்ரஹாரம்) சாலை, அப்துல் ஹமீது குறுக்கு தெரு ஆகிய சாலைகளை தார் சாலைகளாக புதுப்பித்தல் | 4.509 | 4.20 முதல் 6.00 வரை | **200.00** | | |
| | | | | **4.509** | | **200.00** | | |
| | | | **சிப்பம் – 3** | | | | | |
| | | | **பாவ ர் பிளாக் சாலை** | | | | | |
| | | 1 | எழில் நகர் –6வது தெரு, எழில் நகர் –8வது தெரு, எழில் நகர் வீரனார் கோவில் எதிர்புறம் சாலை, வடிவேல் பிள்ளை குறுக்கு சந்து, கோட்டை –4 பசுமை இல்லம் குறுக்கு சந்து, களப்பகாடு –2வது தெரு, களப்பகாடு –3வது தெரு, மணிவிளான் –5வது குறுக்கு தெரு, கோட்டை –1 பைப்லைன் குறுக்கு சாலை, | 4.007 | 3.00 முதல் 3.50 வரை | **200.00** | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | எல்.என்.புரம் குறுக்கு சாலை நீரேற்று நிலையம் அருகில், மணிவிளான் –1வது குறுக்கு சாலை, அப்துல் ஹமீது குறுக்கு சாலை, கடை வீதி –2ம் சாலை ஆகிய சாலைகளை பாவர் பிளாக் சாலைகளாக அமைத்தல் மற்றும் புதுப்பித்தல் | | | |
| | **சிமெண்ட் கான்கீரிட் சாலை** | | | |
| | களப்பக்காடு 3வது குறுக்கு சாலை, சன்னதிவயல் –1வது சாலை, ஜீவா தெரு, வி.எஸ்.ஆர். நகர் குறுக்கு சாலை, வீரமாகாளியம்மன் கோவில் குறுக்கு சாலை, கோட்டை –1 பைப்லைன் ரோடு, பெரியார் நீரேற்று நிலையம் அருகில் உள்ள சாலை, சிலோன் காலணி அருகில் உள்ள சாலை மினி பவர் பம்ப் அருகில் ஆகிய சாலைகளை சிமெண்ட் கான்கிரீட் சாலைகளாக அமைத்தல் மற்றும் புதுப்பித்தல் | | 3.00 முதல் 3.50 வரை | |
| | **தார் சாலை** | | | |
| | கோட்டை –2 சிவன் கோவில் சாலையை தார் சாலையாக புதுப்பித்தல் | | 5.50 | |
| | | 4.007 | | 200.00 |
| | **மொத்தம்** | **13.084** | | **600.00** |

**<u>அலுவலகக் குறிப்பு:</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்

| | | |
|---|---|---|
| **<u>பொருள் எண்.2</u>** | இந்நகராட்சி பகுதியில் திறந்த வெளி கழிப்பிடமில்லா நகராட்சியாக அறிவிக்க (ODF++) இந்நகராட்சி பகுதியில் பராமரிக்கப்பட்டு வரும் 14 கழிவறைகளில் உள்ள பழுதுகள் மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள அனுமதிக்கும், அதற்காக தயார் செய்யப்பட்டுள்ள உத்தேச மதிப்பீடு ரூ.2.00 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வைக்கப்படுகிறது. | **<u>தீர்மான எண்:–</u>** 96<br>**<u>தீர்மானம்:–</u>** அலுவலக குறிப்பு 1,2 ஏற்று அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | **<u>அலுவலக குறிப்பு</u>**<br><br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. மேற்படி பணியினை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண். /2020/இ1) | |
| **<u>பொருள் எண். 3</u>** | இந்நகராட்சி பகுதியில் தற்பொழுது பெய்து வரும் பருவ மழையின் காரணமாக நகரின் சாலைகளில் ஆங்காங்கே மழை நீர் தேங்கி பொதுமக்களுக்கும் போக்குவரத்திற்கும் இடையூறு ஏற்படுவதால் தாற்காலிகமாக புனரமைப்பு செய்யும் வகையில் Wet Mix கொண்டு நிரவும் பணி மேற்கொள்ள அனுமதிக்கும், அதற்காக தயார் செய்யப்பட்டுள்ள உத்தேச மதிப்பீடு ரூ.3.00 லட்சத்திற்க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><br>**<u>அலுவலக குறிப்பு</u>**<br><br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. மேற்படி பணியினை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண். 4694/2020/இ1) | **<u>தீர்மான எண்:–</u>** 97<br>**<u>தீர்மானம்:–</u>** அலுவலக குறிப்பு 1,2 ஏற்று அனுமதிக்கப்பட்டது |
| **<u>பொருள் எண். 4</u>** | அறந்தாங்கி நகராட்சியில் 2019–2020ம் ஆண்டு அறந்தாங்கி சட்டமன்ற தொகுதி உறுப்பினர் மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூ.9.30 இலட்சம் மதிப்பீட்டில் அறந்தாங்கி பேருந்து நிலையத்தில் நவீன குடிநீர் சுத்திகரிப்பு தனியங்கி எந்திரம் (Water ATM) அமைக்கும் பணி மேற்கொள்ள 27.11.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்டவாறு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்திட மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது. | **<u>தீர்மான எண்:–</u>** 98<br>**<u>தீர்மானம்:–</u>** அலுவலக குறிப்பு 1,2,3 ஏற்று அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | <table><tr><td>வ. எண்.</td><td>ஒப்பந்ததாரர் பெயர்</td><td>சதவிகிதம்</td></tr><tr><td>1)</td><td>A.S. Developers,<br>1/324, Avadi Road, Sennerkuppam,<br>Poonamallee, Chennai</td><td>0.75 % குறைவு</td></tr><tr><td>2)</td><td>SB & Co.<br>No.1, ESI Nagar, Thirvanchery,<br>Chennai</td><td>1.28 % அதிகம்</td></tr></table><br>**அலுவலகக் குறிப்பு:—**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்படி பணிக்கு கொடுத்துள்ள A.S. Developers,1/324, Avadi Road, Sennerkuppam, Poonamallee, Chennai என்ற நிறுவனம் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட 0.75 சதவிகிதம் குறைவாக உள்ளதனை ஏற்கலாம்.<br>3. திட்டப்பணியின் அவசர அவசியம் கருதி உள்ளதால் நகர்மன்ற அனுமதியை எதிர் நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதை அங்கீகரிக்கலாம். (ந.க.எண்.1592/2020/இ1) | |
| **பொருள் எண். 5** | இந்நகராட்சி பகுதியில் குடிநீர் விநியோகம் செய்து வரும் குடிநீரில் ஹைப்போ குளோரைடு திரவம் கலக்கும் அமைப்புகள் 7 நீரேற்று நிலையங்களில் உள்ளது பழுதடைந்து உள்ளதனை சரிசெய்திடவும் வெள்ளாறு, அரசு மருத்துவமனை மற்றும் வெள்ளாறு நீருந்து நிலையங்களில் அமைக்கும் பணி மேற்கொள்ள அனுமதிக்கும், அதற்காக தயார் செய்யப்பட்டுள்ள உத்தேச மதிப்பீடு ரூ. 5.00 லட்சத்திற்க்கு மன்றத்தின் அனுமதி வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு**<br><br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. மேற்படி பணியினை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.            /2020/இ1) | **தீர்மான எண்:—** 99<br>**தீர்மானம்:—** அலுவலக குறிப்பு 1,2 ஏற்று அனுமதிக்கப்பட்டது |

<table>
<tr>
<td><u>பொருள் எண். 6</u></td>
<td>அறந்தாங்கி நகராட்சியில் 2019–2020ம் ஆண்டு அறந்தாங்கி சட்டமன்ற தொகுதி உறுப்பினர் மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூ.6.70 இலட்சம் மதிப்பீட்டில் அறந்தாங்கி அரசு மருத்துவமனையில் நவீன குடிநீர் சுத்திகரிப்பு எந்திரம் அமைக்கும் பணி மேற்கொள்ள 27.11.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்டவாறு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்திட மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வ. எண்.</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th><th>சதவிகிதம்</th></tr>
<tr><td>1)</td><td>A.S. Developers,<br>1/324, Avadi Road, Sennerkuppam,<br>Poonamallee, Chennai</td><td>0.75 % குறைவு</td></tr>
<tr><td>2)</td><td>SB & Co.<br>No.1, ESI Nagar, Thirvanchery, Chennai</td><td>3.30 % அதிகம்</td></tr>
</table>
<u>அலுவலகக் குறிப்பு:–</u><br>
1. மன்றம் அனுமதிக்கலாம்<br>
2. மேற்படி பணிக்கு கொடுத்துள்ள A.S. Developers,1/324, Avadi Road, Sennerkuppam, Poonamallee, Chennai என்ற நிறுவனம் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட 0.75 சதவிகிதம் குறைவாக உள்ளதனை ஏற்கலாம்.<br>
3. திட்டப்பணியின் அவசர அவசியம் கருதி உள்ளதால் நகர்மன்ற அனுமதியை எதிர் நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதை அங்கீகரிக்கலாம். (ந.க.எண்.1592/2020/இ1)</td>
<td><u>தீர்மான எண்:–</u> 100<br><u>தீர்மானம்:–</u> அலுவலக குறிப்பு 1,2,3 ஏற்று அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td><u>பொருள் எண். 7</u></td>
<td>இந்நகராட்சி புதுக்குளத்தினை புனரமைக்கவும், மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவரவும் விரிவான திட்ட அறிக்கை தயார் செய்து நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு சமர்ப்பிக்க விரிவான விளக்கவுரைகளும், மண் பரிசோதனை, கட்டிட அமைப்பு (Structural Design) ஆகியவற்றினை மேற்கொள்ளவும், அதற்கான அனுமதிக்கும், மேற்படி பணியினை University College of Engineering, Pattukkottai (A Constituent College of Anna University, Chennai) மூலம் மேற்கொள்ளவும், அதற்கான செலவினம் ரூ.50,000/–க்கும் மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.</td>
<td><u>தீர்மான எண்:–</u> 101<br><u>தீர்மானம்:–</u> அலுவலக குறிப்பு 1,2 ஏற்று அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

**அலுவலக குறிப்பு:–**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம். **(ந.க.எண்.7740/2020/இ1)**

**பொருள் எண். 8**

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் புதுக்கோட்டை மாவட்டத்திற்கு கொரோனா நோய் தடுப்பு நடவடிக்கைகள் குறித்த ஆய்வு மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்க வருகை புரிந்தது அடுத்து இந்நகராட்சியால் மேற்கொள்ளப்பட்டு வரும் மற்றும் முடிவுற்ற திட்டப்பணிகள் குறித்து வரவேற்பு அறிவிப்புகள் விளம்பரம் செய்த வகையில் கீழ்கண்டுள்ள விபரப்படி நாளிதழ்களுக்கு உண்டான விளம்பர கட்டணத் தொகை கீழ்கண்டுள்ளவாறு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது

| வ.எண் | நாளிதழின் பெயர் | பில் எண் மற்றும் நாள் | விளம்பர செய்யப்பட்ட நாள் | தொகை |
|---|---|---|---|---|
| 01 | மாலைமுரசு | TM/20-21/AD00779 Dt.21.10.2020 | **21.10.2020** | **32813.00** |
| 02 | மாலை மலர் | TRY1808105 Dt.22.10.2020 | **21.10.2020** | **24800.00** |
| 03 | தினமலர் | **21 நாள்.22.10.2020** | 22.10.2020 | 23100.00 |
| 03 | தினகரன் (கால் பப்ளிகேசன்ஸ், திருச்சி) | **3300248926 நாள்.22.10.2020** | 22.10.2020 | 23520.00 |
| 04 | தினதந்தி | TRY2021-00007951 நாள்.22.10.2020 | 22.10.2020 | 33600.00 |
| | | மொத்தம் | | **137833.00** |

**அலுவலக குறிப்பு:–**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் மற்றும் ஆணையர் (பொ) அவர்களின் முன் அனுமதி பெற்று தொகை வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம். **(ந.க.எண்.4141/ 2020/இ1)**

**தீர்மான எண்:–** 102

**தீர்மானம்:–** அலுவலக குறிப்பு 1,2 ஏற்று அனுமதிக்கப்பட்டது

<table>
<tr>
<td><u>பொருள் எண். 9</u></td>
<td>இந்நகராட்சி மின்னாக்கி (Generator) இணைக்கப்பட்டுள்ள மின் கலம் (Battary) அதிக காலம் பயன்பாடு காரணமாக அதன் மின் அளிக்கும் திறன் குறைந்து விட்டதால், புதிய மின்கலம் வாங்கி பயன்படுத்தவும் அதற்கான அனுமதிக்கும், அதற்கான செலவினம் ரூ.12,000/—க்கும் மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><br><u>அலுவலக குறிப்பு:—</u><br><br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம். (ந.க.எண். /2020/இ1)</td>
<td><u>தீர்மான எண்:—</u> 103<br><u>தீர்மானம்:—</u> அலுவலக குறிப்பு 1,2 ஏற்று அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td><u>பொருள் எண். 10</u></td>
<td>அறந்தாங்கி நகராட்சியில் தமிழ்நாடு நகர்ப்புற சாலை மேம்பாட்டு திட்டம் 2019—2020ன் கீழ் சாலை பணிகளுக்கான ஒப்பந்தப்புள்ளி அறிவிப்புகள் விளம்பரம் செய்த வகையில் கீழ்கண்டுள்ள விபரப்படி நாளிதழ்களுக்கு உண்டான விளம்பர கட்டணத் தொகை கீழ்கண்டுள்ளவாறு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது<br><br>
<table>
<tr><th>வ. எண்</th><th>நாளிதழின் பெயர்</th><th>பில் எண் மற்றும் நாள்</th><th>விளம்பர செய்யப்பட்ட நாள்</th><th>தொகை</th></tr>
<tr><td>01</td><td>Accord Advertising Agencies, Chennai</td><td>DIPR/AAA/0408/19-2020 Dt.29.10.2019</td><td>29.10.2019</td><td>68947.00</td></tr>
<tr><td colspan="4">மொத்தம்</td><td>68947.00</td></tr>
</table>
<br><u>அலுவலக குறிப்பு:—</u><br><br>மன்றம் அனுமதி வழங்கலாம் (ந.க.எண்.3134/2019/இ1)</td>
<td><u>தீர்மான எண்:—</u> 104<br><u>தீர்மானம்:—</u> அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| **<u>பொருள் எண். 11</u>** | இந்நகராட்சி மின்னாக்கி (Generator) 2000–2001ம் ஆண்டு முதல் இயங்கி வருகிறது. அதிக காலம் பயன்பாடு காரணமாக அதன் மின் அளிக்கும் திறன் மற்றும் சீரான மின் அழுத்தம் அளிப்பது குறைந்து விட்டதால், அலுவலகத்தில் மின் தடை காலத்தில் கணினி உள்ளிட்ட மின் சாதனங்கள் பயன்படுத்துவதில் இடையூறு ஏற்படுகிறது. எனவே புதிய 100 கே.வி.ஏ .மின்னாக்கி (Generator) வாங்கி பயன்படுத்தவும் அதற்கான அனுமதிக்கும், அதற்கான செலவினம் ரூ.10.00/ –லட்சத்திற்கும் மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><br>**<u>அலுவலக குறிப்பு:–</u>**<br><br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம். (ந.க.எண்.3036/ 2020/இ1) | **<u>தீர்மான எண்:–</u>** 105<br>**<u>தீர்மானம்:–</u>** அலுவலக குறிப்பு 1,2 ஏற்று அனுமதிக்கப்பட்டது |
| **<u>பொருள் எண். 12</u>** | இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் இயக்கப்பட்டு வரும் கீழ் கண்டுள்ள வாகனங்களுக்கு தகுதி சான்று பெறவும் வாகன பராமரிப்பு பணிகள் செய்யவும் ஆயுள் காப்பீடு பிரீமியம் செலுத்தவிம் அனுமதிக்கும் உத்தேச செலவினம் ரூ.4.00 லட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>1. டி.என்.55.பி.ஒய் 5509 – LCV வாகனம்<br>2. டி.என்.55.பி.ஒய் 5564 – LCV வாகனம்<br>3. டி.என்.55.பி.ஒய் 5509 – LCV வாகனம்<br>4. டி.என்.55.பி.ஒய் 5509 – LCV வாகனம்<br><br>**<u>அலுவலகக்குறிப்பு:–</u>**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. மேற்படி தொகை பொது நிதியில் இருந்து செலவு செய்ய மன்றம் அனுமதிக்கலாம் . (ந.க.எண்:3563/2019/எச்1) | **<u>தீர்மான எண்:–</u>** 106<br>**<u>தீர்மானம்:–</u>** அலுவலக குறிப்பு 1,2 ஏற்று அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| **<u>பொருள் எண். 13</u>** | இந்நகராட்சி 14 ஆழ்குழாய் கிணறுகளிலிருந்து பொதுமக்களுக்கு அளிக்கப்படும் குடிநீர் அருந்துவதற்கு உகந்ததா என ஆய்வு குடிநீர் வாடிகால் வாரியம் மூலம் மேற்கொள்ளவும் அதற்கான அனுமதிக்கும், அதற்கான செலவினம் ரூ.50,000/—க்கும் மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><br>**<u>அலுவலக குறிப்பு:—</u>**<br><br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம். (ந.க.எண். /2020/இ1) | **<u>தீர்மான எண்:—</u>** 107<br>**<u>தீர்மானம்:—</u>** அலுவலக குறிப்பு 1,2 ஏற்று அனுமதிக்கப்பட்டது |

**ஒம்/—ஜீ.சுப்ரமணியன்**
**தனி அலுவலர்**
**அறந்தாங்கி நகராட்சி**

# அறந்தாங்கி நகராட்சி

## நகர்மன்ற கூட்ட நிகழ்ச்சி நிரல்

## ஸ்ரீ சார்வாரி வருடம் மார்கழி மாதம் 16–ஆம் நாள் டிசம்பர் மாதம் 31.12.2020ம் நாள் வியாழன் கிழமை மாலை 4.00 மணிக்கு நடைபெற உள்ள சாதாரண கூட்டப் பொருள் விபரம்

| | | |
|---|---|---|
| **பொருள் எண். 1** | நகராட்சி பொறியாளர் மற்றும் ஆணையர் (பொ) அவர்களின் டிசம்பர்–2020ம் மாதத்திற்கான நாட்குறிப்பு பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு:–**<br><br>பதிவு செய்யலாம் | **தீர்மான எண்:–** 108<br>**தீர்மானம்:–** பதிவு செய்யப்பட்டது |
| **பொருள் எண். 2** | இந்நகராட்சியில் பொது சுகாதாரப்பிரிவில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் ரிலையான் பெசிலிட்டி சர்வீஸ் பிரைவெட் லிமிடெட் என்ற நிறுவனத்தின் மூலம் ஒப்பந்த அடிப்படையில் 76 துப்புரவு பணியாளர்களை கொண்டு 31.12.2020 வரை பணி உத்தரவு வழங்கப்பட்டு தூய்மை பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை செயல்திட்ட பணிகளை முழுமையாக மேற்கொள்ள பணியாளர்கள் பற்றாகுறையாக உள்ளனர். எனவே அரசு ஆணை எண்: 101 நாள்: 30.04.1997 ன் அரசாணையில் தெரிவித்த அளவு கோலின்படி, பற்றாகுறையாகவுள்ள 26 துப்புரவு பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் அமர்த்திபணிகள் மேற்கொள்ளவும் 76 துப்புரவு பணியாளர்களுக்கு பெறப்பட்ட அனுமதியை புதுபித்துக்கொள்ளவும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், தஞ்சாவூர் அவர்களின் மூலமாக நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு அனுமதி வழங்க கோரி கடிதம் அனுப்பபட்டுள்ளது. பொது சுகாதாரப்பிரிவின் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் தூய்மை பணிகள் எவ்வித பாதிப்புமின்றி பணிகளை மேற்கொள்ளவும் மற்றும் கொரோனா தடுப்பு | **தீர்மான எண்:–** 109<br>**தீர்மானம்:–** அலுவலக குறிப்பு 1,2,3 ஏற்று அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும் வீடுகளில் தினசரி கிருமி நாசினிகள் தெளித்தும் அங்கு சேகரமாகும் குப்பைகளை இறுதிசெய்ய வேண்டி உள்ளதால், தற்போது தேர்தல் நேரமாக உள்ளதால் ரிலையான் பெசிலிட்டி சர்வீஸ் நிறுவனமும் ஏற்கனவே பெற்று வரும் ரூ.546/- (நாள் ஒன்றுக்கு) ஊதிய விகிதத்தில் பணிபுரிய சம்மதம் தெரிவித்து கடிதம் அனுப்பி உள்ளனர். எனவே பொதுசுகாதாரப்பிரிவின் அவசர அவசியம் கருதி ஏற்கனவே 76 துப்புரவு பணியாளர்களை கொண்டு ஒப்பந்த அடிப்படையில் பணிபுரிந்து வரும் ரிலையான் பெசிலிட்டி சர்வீஸ் என்ற நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ள பணி உத்தரவு 31.12.2020ம் நாளுடன் முடிவடைவதால் மேலும் அந்நிறுவனத்திற்கு ஏற்கனவே பெற்று வரும் ஊதிய விகிதத்தில் (01.01.2021 முதல் 30.6.2021) ஆறு மாதத்திற்கு பணி ஆணையை நீட்டித்து வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. அதற்குரிய செலவினத் தொகை மன்றத்திற்கு 01.01.2021 முதல் 30.6.2021 வரை மன்றம் ஒன்றுக்கு ரூ.12.60 இலட்சம் என்று ரூ.75.60 இலட்சத்திற்கு மன்றத்திற்கு அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**<u>அலுவலகக்குறிப்பு :</u>**<br><br>1. மன்றம் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.<br>2. பொது சுகாதாரப்பிரிவின் அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம்.<br>3. பழைய 2020–21ம் ஆண்டு விலை விகிதத்தில் வழங்கலாம்.<br>(ந.க.எண்.7373/2016/எச்1) | |
| **<u>பொருள் எண். 3</u>** | அறந்தாங்கி நகராட்சியில் டெங்கு நோய் தடுப்பு பணிகள் மேற்கொள்ள 41 பணியாளர்களை கொண்டு ஒப்பந்த அடிப்படையில் பணிபுரிய டிரஸ்டஸ் அவுட் சோர்சிங் சொலுயுசன் பிரைவேட் லிமிடெட் என்ற நிறுவனத்திற்கு ஒப்பந்த முறைமூலம் 31.12.2020 வரை பணிபுரிய பணி ஆணை வழங்கப்பட்டுள்ளது. இந்நிலையில் துணை இயக்குநர் சுகாதாரப்பணிகள், புதுக்கோட்டை அவர்களின் ந.க.எண்:451/அ3/2020 நாள்:14.7.2020ன் | <u>தீர்மான எண்:–</u> 110<br><u>தீர்மானம்:–</u> அலுவலக குறிப்பு 1,2 ஏற்று அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | படி மேலும் 50 தற்காலிக பணியாளர்களை நியமித்து தொற்று நோய் தடுப்பு பணிகளை மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டு உள்ளது.மேலும் நகராட்சியில் நிதிநிலையை கருத்தில் கொண்டும், ஊராடங்கு நடைமுறையில் உள்ளதாலும் ஒப்பந்த புள்ளி கோர இயலாத நிலை உள்ளதால் ஏற்கனவே நடைமுறையில் உள்ள 41 களப்பணியாளர்களை கொண்டு பணிகள் மேற்கொள்ள தடுப்பு பணிகள் எவ்வித பாதிப்புமின்றி பணிகளை மேற்கொள்ள பொதுசுகாதாரப்பிரிவின் அவசர அவசியம் கருதி ஏற்கனவே ஒப்பந்த அடிப்படையில் பணிபுரிந்து வரும் டிரஸ்டஸ் அவுட் சோர்சிங் சொலுயுசன் பிரைவேட் லிமிடெட் என்ற நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ள பணி உத்தரவை மேலும் ஆறு மாத காலத்திற்கு (01.1.2021 முதல் 30.6.2021) வரை பணி ஆணையை நீட்டித்து வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.மேலும் அதற்குரிய செலவினம் 01.01.2021 முதல் 30.6.2021 வரை ரூ.19.80 இலட்சத்திற்கு (மாதம் ரூ.3.30 இலட்சம் வீகிதம்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**<u>அலுவலகக்குறிப்பு :</u>**<br><br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. பொது சுகாதாரப்பிரிவின் அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம் | |
| **<u>பொருள் எண். 4</u>** | அறந்தாங்கி நகராட்சியில் தூய்மை இந்தியா திட்டதின் கீழ் பொது கழிப்பிடங்களை சுத்தம் செய்ய 22 பணியாளர்களை கொண்டு ஒப்பந்த அடிப்படையில் பணிபுரிய டிரஸ்டஸ் அவுட் சோர்சிங் சொலுயுசன் பிரைவேட் லிமிடெட் என்ற நிறுவனத்திற்கு ஒப்பந்த முறைமூலம் 31.12.2020 வரை பணிபுரிய பணி ஆணை வழங்கப்பட்டுள்ளது. மழைகாலம்,கொரோனா நோய் தெற்று காய்ச்சல் (Covid 19) தடுப்பு பணிகள் மேற்கொள்ள வேண்டி உள்ள நிலையில் தொடர்ந்து பணியாளர்கள் அமர்த்த வேண்டி உள்ளது. பொது சுகாதாரப்பிரிவின் பணிகள் எவ்வித பாதிப்புமின்றி பணிகளை மேற்கொள்ள பொதுசுகாதாரப்பிரிவின் அவசர அவசியம் கருதி ஏற்கனவே ஒப்பந்த அடிப்படையில் பணிபுரிந்து வரும் டிரஸ்டஸ் அவுட் சோர்சிங் சொலுயுசன் பிரைவேட் லிமிடெட் என்ற | **<u>தீர்மான எண்:–</u>** 111<br>**<u>தீர்மானம்:–</u>** அலுவலக குறிப்பு 1,2 ஏற்று அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | நிர்வனத்திற்கு வழங்கப்பட்டுள்ள பணி உத்தரவை அதே ஊதிய விகிதத்தில் பணி மேற்கொள்ள மேலும் அந்நிறுவனத்திற்கு (01.01.2021 முதல் 30.6.2021) ஆறு மாதத்திற்கு பணி ஆணையை செலவினம் ரூ.3.75 இலட்சம் (மாத வீகிதம்) ரூ.22.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**<u>அலுவலகக்குறிப்பு :</u>**<br><br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. பொது சுகாதாரப்பிரிவின் அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம் | |
| **<u>பொருள் எண். 5</u>** | அறந்தாங்கி நகராட்சியில் கலவை உரக்கிடங்கில் 1 JCB ஒட்டுநர், 2 ஒட்டுநர்கள் மற்றும் 3 காவலர்களை கொண்டு ஒப்பந்த அடிப்படையில் பணிபுரிய டிரஸ்டஅஸ் அவுட் சோர்சிங் பிரைவேட் லிமிடெட் என்ற நிறுவனத்திற்கு ஒப்பந்த முறைமூலம் 31.12.2020 வரை பணிபுரிய பணி ஆணை வழங்கப்பட்டுள்ளது. தற்போது கொரோனா மற்றும் மழைகாலமாக இருப்பதால் பணிகளை மேற்கொள்ள வேண்டி உள்ளதாலும் தொடர்ந்து பணியாளர்கள் மற்றும் ஒட்டுநர்களை பணி அமர்த்த வேண்டி உள்ளது. பொது சுகாதாரப்பிரிவின் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் வாங்கப்பட்டுள்ள வாகனங்களை இயக்கவும், உரக்கிடங்கில் காவல் பணிகளை மேற்கொள்ளவும் பணிகள் எவ்வித பாதிப்புமின்றி பணிகளை மேற்கொள்ள பொதுசுகாதாரப்பிரிவின் அவசர அவசியம் கருதி ஏற்கனவே ஒப்பந்த அடிப்படையில் பணிபுரிந்து வரும் டிரஸ்டஅஸ் அவுட் சோர்சிங் பிரைவேட் லிமிடெட் என்ற நிர்வனத்திற்கு வழங்கப்பட்டுள்ள பணி உத்தரவை அதே ஊதிய விகிதத்தில் வழங்க அந்நிறுவனத்திற்கு ஆறு மாதங்களுக்கு (01.1.2021 முதல் 30.6.2021) வரை பணி ஆணையை நீட்டித்து வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. மேலும் 01.01.2021 முதல் 30.6.2021 வரை செலவினம் ரூ.6.00 இலட்சம் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. | **<u>தீர்மான எண்:–</u>** 112<br>**<u>தீர்மானம்:–</u>** அலுவலக குறிப்பு 1,2 ஏற்று அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | **<u>அலுவலகக்குறிப்பு :</u>**<br><br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. பொது சுகாதாரப்பிரிவின் அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம் | |
| **<u>பொருள் எண். 6</u>** | அறந்தாங்கி நகராட்சியில் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் அரசு மற்றும் நகராட்சி பள்ளி கழிவறை மற்றும் பள்ளி வளாகங்களில் தூய்மை பணிகள் மேற்கொள்ள 12 பணியாளர்களை கொண்டு ஒப்பந்த அடிப்படையில் பணிபுரிய கிரீன் லேண்ட் அவுட் சோர்சிங் சர்வீஸ் என்ற நிறுவனத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் 1.02.2020 முதல் 31.01.2021 வரை பணிபுரிய பணி ஆணை வழங்கப்பட்டுள்ளது. துப்புரவு பணிகள் மேற்கொள்ள பணியாளர்களை அமர்த்த வேண்டி உள்ளது. மேலும் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி, அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளி, நகராட்சி நடுநிலைப்பள்ளி மேற்கு, நகராட்சி தொடக்கப்பள்ளி (கிழக்கு), நகராட்சி நடுநிலைப்பள்ளி எல்.என்.புரம் ஆகிய பள்ளிகளின் தலைமை ஆசிரியர்கள் இந்நிறுவனம் நல்ல முறையில் பணிபுரிந்து வருவதாக சான்றளித்துள்ளனர். பள்ளிகளின் கழிவறைகளை துப்புரவு பணிகள் எவ்வித பாதிப்புமின்றி தூய்மை பணிகளை மேற்கொள்ள தற்போது மழைகாலமாக இருப்பதால் மற்றும் தேர்தல் நேரமாக இருப்பதால் பொதுசுகாதாரப்பிரிவின் அவசர அவசியம் கருதி ஏற்கனவே ஒப்பந்த அடிப்படையில் பணிபுரிந்து வரும் கிரீன் லேண்ட் அவுட் சோர்சிங் சர்வீஸ் என்ற நிர்வனத்திற்கு வழங்கப்பட்டுள்ள பணி உத்தரவை மேலும் ஐந்து மாதங்களுக்கு (01.02.2020 முதல் 30.6.2021) பணி ஆணையை நீட்டித்து வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.01.2.2021 முதல் 30.6.2021 வரை 5 மாதத்திற்கு நீட்டிப்பு செய்யவும் அதற்குரிய செலவினம் ரூ.2.50 இலட்சம் (மாத வீகிதம்) ரூ.12.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலகக்குறிப்பு :</u>**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. பொது சுகாதாரப்பிரிவின் அவசர அவசியம் கருதி 01.02.2021 முதல் 30.6.2021 வரை 5 மாதம் மன்றம் அனுமதிக்கலாம் | **<u>தீர்மான எண்:–</u>** 113<br>**<u>தீர்மானம்:–</u>** அலுவலக குறிப்பு 1,2 ஏற்று அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| **<u>பொருள் எண். 7</u>** | அறந்தாங்கி நகராட்சி எல்லைப் பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் தூய்மை பணியாளர்கள் ஒப்பந்த அடிப்படையில் பணிபுரிந்து வருகின்றனர். அவர்களுக்கான ஊதியம் வழங்க நவம்பர் 2020 மாதத்திற்கான உத்தேச செலவினம் தொகை ரூ.10.00 லட்சத்திற்கு (ரூபாய் பத்து லட்சம் மட்டும் ) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**<u>அலுவலகக்குறிப்பு:-</u>**<br><br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. பொது நிதியில் இருந்து இப்பணிகள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம் | **<u>தீர்மான எண்:-</u>** 114<br>**<u>தீர்மானம்:-</u>** அலுவலக குறிப்பு 1,2 ஏற்று அனுமதிக்கப்பட்டது |
| **<u>பொருள் எண். 8</u>** | அறந்தாங்கி நகராட்சி எல்லைப் பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் இரண்டாம் டிவிசனில் நிர்வாக காரணங்களுக்காக் 38 தூய்மை பணியாளர்கள் ஒப்பந்த அடிப்படையில் பணிபுரிந்து வருகின்றனர். அவர்களுக்கான ஊதியம் வழங்க நவம்பர் 2020 மாதத்திற்கான உத்தேச செலவினம் தொகை ரூ.10.00 லட்சத்திற்கு (ரூபாய் பத்து லட்சம் மட்டும் ) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலகக்குறிப்பு:-</u>**<br><br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. பொது நிதியில் இருந்து இப்பணிகள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம் | **<u>தீர்மான எண்:-</u>** 115<br>**<u>தீர்மானம்:-</u>** அலுவலக குறிப்பு 1,2 ஏற்று அனுமதிக்கப்பட்டது |
| **<u>பொருள் எண். 9</u>** | நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் சுற்றறிக்கையின் படி முடிதிருத்தகம் மற்றும் அழகு நிலையங்கள், ஸ்பா, மசாஜ் நிலையம் ஆகிய நிறுவனங்கள் இந்நகராட்சி மூலம் உரியவாறு உரிமம் பெறுவதற்கு தினசரி நாளிதழில் விளம்பரம் செய்ய ஆகும் உத்தேச செலவினம் தொகை ரூ.20000 (ரூபாய் இருபது ஆயிரம் மட்டும் ) க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. | **<u>தீர்மான எண்:-</u>** 116<br>**<u>தீர்மானம்:-</u>** அலுவலக குறிப்பு 1,2 ஏற்று அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | **அலுவலகக்குறிப்பு:—**<br><br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. பொது நிதியில் இருந்து இப்பணிகள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம் | |
| **பொருள் எண். 10** | இந்நகராட்சி பகுதியில் 15வது மத்திய நிதிக்குழு மான்ய வழிகாட்டு நெறிமுறைகளின் படி (15th CFC Tied Grant - 1st Installment - 2020-2021) ன் கீழ் வரபெறும் மான்யத் தொகைக்கு, இந்நகராட்சி பகுதியில் குடிநீர் தேவை உள்ளூர் ஆழ்குழாய் கிணறுகளை பொறுத்தே உள்ளதாலும், இந்நகராட்சி எல்.என்.புரம் பகுதியில் எதிர்வரும் கோடை காலத்தில் ஏற்படும் வறட்சியை சமாளிக்கும் வகையிலும், ஏற்கனவே உள்ள ஆழ்குழாய் கிணற்றில் நீர்மட்டம் குறைந்து வருவதாலும் புதிய ராட்சத ஆழ்குழாய் கிணறு அமைத்து நீர் உந்து குழாய், 20 எச்.பி. சப்மெர்சிபில் மோட்டார் உட்பட அதற்காக தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ.23.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு**<br><br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. மேற்படி மான்யத் தொகையினை வழிகாட்டு நெறிமுறைகளின்படி குடிநீர் தேவைக்கு பயன்படுத்திடவும் மன்றம் அனுமதிக்கலாம், | **தீர்மான எண்:—** 117<br>**தீர்மானம்:—** அலுவலக குறிப்பு 1,2 ஏற்று அனுமதிக்கப்பட்டது |
| **பொருள் எண். 11** | அறந்தாங்கி நகராட்சியில் **2020—2021**ம் ஆண்டு பொது நிதியின் கீழ் ரூ.3.00 இலட்சம் மதிப்பீட்டில் பருவ மழை காலத்தில் அதிக மழை காரணமாக பழுதடைந்த சாலைகளை WMM Mix கொண்டு தற்காலிகமாக சீரமைக்கும் பணி மேற்கொள்ள **31.12.2020** அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்டவாறு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்திட மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.<br><br>வ. எண். \| ஒப்பந்ததாரர் பெயர் \| சதவிகிதம் | **தீர்மான எண்:—** 118<br>**தீர்மானம்:—** அலுவலக குறிப்பு 1,2 ஏற்று அனுமதிக்கப்பட்டது |

<table>
<tr>
<td></td>
<td>
<table>
<tr><td>1)</td><td>திரு.அ.கிருஷ்ணமூர்த்தி,<br>நகராட்சி ஒப்பந்ததாரர்</td><td>0.08 % குறைவு</td></tr>
<tr><td>2)</td><td>திரு.ஆர்.ராசு,<br>நகராட்சி ஒப்பந்ததாரர்</td><td>1.37 % அதிகம்</td></tr>
</table>
<u>அலுவலகக் குறிப்பு :–</u><br>
1. மன்றம் அனுமதிக்கலாம்<br>
2. மேற்படி பணிக்கு கொடுத்துள்ள திரு.அ.கிருஷ்ணமூர்த்தி, ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட 0.08 சதவிகிதம் குறைவாக உள்ளதனை ஏற்கலாம். (ந.க.எண். 4694/2020/இ1)
</td>
<td></td>
</tr>
<tr>
<td><u>பொருள் எண். 12</u></td>
<td>இந்நகராட்சி வார்டு எண். 7ல் புதியதாக அமைக்கப்பட்டுள்ள தீயணைப்பு நிலையத்திற்கு சாலை அமைத்து தரகோரி நிலைய அலுவலர், தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகள் நிலையம், அறந்தாங்கி அவர்களிடமிருந்து வரப்பெற்றுள்ளது. மேற்படி சாலை அமைக்க அனுமதியும், அதற்காக தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு தொகை ரூ.5.00 லட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>
<u>அலுவலகக் குறிப்பு</u><br>
1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>
2. மேற்படி பணியினை சிறப்பு சாலைகள் திட்டம் 2020–2021 சிப்பம் 2ல் சேர்த்து மேற்கொள்ளலாம் / மேற்படி பணியில் ஏற்படும் சேமிப்பு நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
</td>
<td><u>தீர்மான எண்:–</u> 119<br>
<u>தீர்மானம்:–</u> அலுவலக குறிப்பு 1,2 ஏற்று அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

ஒம்/–ஜீ.சுப்ரமணியன்
தனி அலுவலர்
அறந்தாங்கி நகராட்சி